கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – தோவாளை கிழக்கு ஒன்றியம்

ஆரல்வாய்மொழி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!



கன்னியாகுமரி, நவ.-5- கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், ஆரல் வாய்மொழி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது (03.11.2026 - செவ்வாய்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில் ஆரல்வாய்மொழி பேரூர் செயலாளர் கு.சுப்பிர மணியன் தலைமையில், தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் த.செல்வன் முன்னிலையில் ஆரல் வாய்மொழி, பைபாஸ் சாலை, ராயல் உணவகம் அருகில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தின் இறுதியில் கழக நிர்வாகி தாமோதரன் ஏற்பாட்டில் ஆரல்வாய் மொழி பேரூர் கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் தீபாவளி பரிசுகளை வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணைச் செயலாளர் A.R.பூதலிங்கம், பொதுக் குழு உறுப்பினர் S.K.ரஹ்மான், பேரூர் அவைத் தலைவர் S.R.அகஸ்திலிங்கம், துணைச் செயலாளர் மகேஸ்வரி, முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் S.நாகராஜன், மாவட்ட பிரதிநிதிகள் P.சந்திரன், செ.சேதுவேல், S.இம்மானுவேல், S.கல்யாணசுந்தரம், C.காந்தி, ஒன்றிய நிர்வாகிகள் S.சீனிவாசன், R.ராஜபாபு, C.ராஜா ரமணன், தலைமைக் கழக பேச்சாளர் சி.செல்வகுமார், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் C.சரவணன், K.S.பழனி, V.N.ராஜன், சொ.மகாராஜபிள்ளை, M.மகாலெட்சமி உட்பட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட, கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறை வேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர் மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் ஆரல்வாய்மொழி பேரூர் தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.



நெய்வேலி,NLC–யில் தொ.மு.ச. உருவாவதற்கு மிக முக்கிய நபராக இருந்து பணியாற்றிய கழகத்தின் முன்னோடி, முன்னாள் வட்ட செயலாளர் காளியப்பன் அவர்களின் மறைவு செய்தி அறிந்தவுடன் நெய்வேலி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சபா.இராசேந்திரன் அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நகர செயலாளர், தொ.மு.ச.பொது செயலாளர் வி.குருநாதன், முன்னாள் நகர செயலாளர் பக்கிரிசாமி , தொ.மு.ச.தலைவர், தொ.மு.ச. பொருளாளர் மற்றும் தொ.மு.ச. நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

திருமழிசையில் டெங்கு காய்ச்சல்!

திருவள்ளூர், நவ.5- திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பகுதியில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருவது அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. டெங்கு காய்ச்சலால் திருமழிசை பகுதி சார்ந்த பாஸ்கரன் தேவி ஆகியோர் 10 வயது மகன் சந்தோஷ்குமார் பாதிக்கப்பட்ட உயிரிழந்தார் 30-க்கும் மேற் பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப் பட்டுள்ளது

இந்நிலையில், அப்ப குதியில் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த வேண்டிய கொசு ஒழிப்புப் பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வில்லை எனப் பொது மக்கள் குற்றம்சாட்டு கின்றனர்.

குறிப்பாக, குடியிருப் புப் பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை அகற்றுதல், கொசு மருந்து தெளித்தல், கழிவுநீர் கால்வாய்களைச் சீரமைத்தல், சுற்றுப்புறத் தூய்மையைப் பராமரித்தல் உள்ளிட்ட அடிப் படை சுகாதாரப் பணிகளில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

என்.எல்.சி, தொ.மு.ச.

மூத்த முன்னோடி ஜி.பி. காளியப்பன் மறைவு!

சபா.இராசேந்திரன்–தொ.மு.ச.–கழக நிர்வாகிகள் அஞ்சலி!

கடலூர்,நவ.5 - நெய்வேலி NLC தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனர்களில் ஒருவரும், மூத்த முன்னோடியுமான ஜி.பி.காளியப்பன் அவர்கள் (வயது 98), 01.11.2026 அன்று இயற்கை எய்தினார், G.P.காளியப்பன் அவர்கள் NLC இந்தியா நிறுவனத்தில் Mine1 பிரிவில் CME Operator / Spl. Grade ஆகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

நெய்வேலியில் NLC தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தொடங்கப்பட்ட போது அதன் நிறுவனர்களாக விளங்கிய ஏழு பேரில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. தனது வாழ்நாள் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மிகுந்த ஈடுபாடும், தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் மீதும் ஆழ்ந்த பற்றும் கொண்டு வாழ்ந்தவர்.

தனது குடும்பத்தில் உள்ள அனைவரையும் கழக இயக்கத்தில் ஈடுபடுத்தி, கழகப் பணியிலும் தொழிற்சங்கப் பணியிலும் பங்கேற்கச் செய்தவர். இவரது சகோதரர் G.P. வெங்குடு அவர்கள் கோபிசெட்டிபாளையம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கழகத்திற்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திற்கும் நீண்டகாலமாக அரும் பணியாற்றிய மூத்த முன்னோடியான அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், நெய்வேலி முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும், பண்ருட்டி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சபா. இராஜேந்திரன் அவர்கள் நேரில் சென்று மலரஞ்சலி செலுத்தினார்.

மேலும், நெய்வேலி நகரக் கழகச் செயலாளர், கழக நிர்வாகிகள், தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைமைப் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அன்னாரின் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி இறுதி மரியாதை செலுத்தினர். NLC தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் வளர்ச்சிக்கும், கழக இயக்கத்தின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக விளங்கிய மூத்த முன்னோடி G.P. காளியப்பன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், தொழிற்சங்கத் தோழர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோவை மு. சுலைமான்

நவம்பர் 5 (1983)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து, குறைந்த விலையிலே தரணும்னு, 450 டன் வெங்காயத்தை மகாராஷ்டிராவில் நம்ம அதிகாரிகள் போய் வாங்கி, ரயில் மூலம் தமிழ்நாட்டுக்கு அனுப்பியதா சொன்னாங்க. வந்தது எல்லாமே அழுகி இருந்ததால், திருப்பி அனுப்பிட்டதா அதே நம்ம அதிகாரிங்க சொல்றாங்க. ஆனால் ரயில் அதிகாரிங்களோ அப்படி எதுவும் திருப்பி அனுப்பச் சொல்லி எங்க கிட்ட வரலைங்கறாங்க. அப்ப எங்க தான் அந்த 450 டன் வெங்காயம் போயிருக்கும்?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; எம்மாம் பெரிய ஃப்ராடுத்தனம். ஒரு சமயம் தன் துறைகளை ஒழுங்கா கவனிக்காமல் மற்றத் துறைகளில் மூக்கை நுழைக்கிற 'கலெக்சன்' குமாரைக் கேட்டால் தெரியுமோ என்னவோ! 450 டன் மெகா சுருட்டலை நினைச்சா இப்பவே கண்ணு எரியுது! தண்ணி வருது.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(4.11.2026)



1. திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அருகே நண்பர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் பிரபல ரவுடி சரமாரியாக வெட்டிக் கொலை ....

2. ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே மனநலம் பாதித்த வாலிபரை சரமாரியாக அடித்து கொலை செய்த ஐந்து பேர் சிக்கினர் ....

3. மதுரை மத்திய சிறையில் கைதியை கண்காணித்த போலீஸ்காரர் மீது சரமாரி தாக்குதல்....

4. திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே பதினாறு வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி பாலியல் சில்மிசத்தில் ஈடுபட்ட ஆட்டோ ஓட்டுனர் சிக்கினார் ...

5. சென்னை ஓட்டேரி அருகே பட்டாளம் பகுதியில் பானிப் பூரி கடை வியாபாரியை வழிமறித்து கத்தி முனையில் பணம் மற்றும் செல்போன் பறித்த இருவர் சிக்கினர் ....



6. சென்னை புளியந்தோப்பு அருகே வேலைக்குச் சென்று விட்டு திரும்பிய வட மாநில வாலிபரை வழிமறித்து கத்தி முனையில் வழிப்பறி செய்த இருவர் சிக்கினர்...

7. சென்னை ஆலந்தூர் அருகே மடுவங்கரை பகுதியில் உள்ள பெண்கள் தனியார் விடுதியில் 15 லட்ச ரூபாய் பணம் நூதன முறையில் மோசடி, பெண் சிக்கினார் ....

8. சென்னையை அடுத்த மாதவரம் ரவுண்டானா அருகே மீஞ்சூரில் இருந்து கோயம்பேடு வந்த மாநகரப் பேருந்து கண்ணாடியை உடைத்த ரவுடி. பயணிகள் அலறியடித்து ஓட்டம் ....



9.சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் மீது பெரம்பூர் அருகே சரமாரியாக கல்வீசிய மர்மநபர்கள், பயணிகள் பீதி ....

10. திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே இரவு நேரத்தில் ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் வீட்டின் மீது மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டு வீச்சு.

11. தமிழ்நாடு முழுவதும் கஞ்சா விற்பனை படுஜோர் , போலீசார் நடத்திய அதிரடி சோதனையில் 1760 கிலோ கஞ்சா சிக்கியது ....



12. சென்னை திருவொற்றியூர் அடுத்த எண்ணூர் கடற்கரை சாலையில் உள்ள டாஸ்மாக் கடையில் மதுபானம் வாங்க நின்றவர்கள் மீது சரமாரியாக காலி பாட்டில்கள் வீச்சு , மதுப் பிரியர்கள் அலறி அடித்து ஓட்டம்....

13. சென்னை விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார்தாரர் மீது பொய் வழக்குப் பதிவு செய்த இரண்டு இன்ஸ்பெக்டர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க சென்னை ஐகோர்ட் உத்தரவு ...

14. கிண்டி அரசு பல்நோக்கு மருத்துவமனையில் பணி புரியும் காவலாளி பட்டாகத்தியுடன் ரீல்ஸ் வெளியிட்டதால் பரபரப்பு ....